# AN APPLIED PSYCHOLOGICAL STUDY ON TEACHING AND LEARNING ACTIVITIES AMONG PRE-SCHOOL STUDENTS

K.L. Fathima Nafla[1], A.M.S. Nifra[2]
[1] Post Graduate Student (Philosophy), Faculty of Graduate Studies, University of Jaffna, Sri Lanka.
[2]Under Graduate Student (Philosophy), Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

**Abstract**

Every single person firms their existence in this world since their birth. Even though, human behaviours are highly influenced and shaped by environmental, social and cultural factors. The new challenges faced by human beings, the ways of handling those challenges and the multiple experience in every age categories contribute to the personality development of human beings. A child is going to pre-school in the initial stage of understanding its own desires and environmental scenarios which help to develop aesthetic values and self-understanding. Therefore, a child started to understand himself/herself in the pre-school stage. In this regard, this study was conducted in order to exemplify whether the pre-school teaching and learning activities and the pre-school environment help to develop personality and the skills of the pre-school students. This study was conducted in Digana Located in Kandy district by selecting 3 pre-schools. Questionnaires, key-informant interviews and observation were applied in order to collect primary data among teachers, students, parents about teaching and learning process and related activities, teaching and learning environment. The relevant books, research articles, reliable web sources, newspaper articles and records were used as secondary data source for this research. This research was analysed by using descriptive analysis method and critical analysis method.

**Key Words:** Pre-School, Teaching and Learning, Personality Development, Erik Erikson

**ஆய்வுச்சுருக்கம்**

ஒவ்வொரு தனி மனிதனும் தனது இருப்பை பிறப்பிலிருந்தே பெற்றுக்கொள்கிறான், ஆனால் சூழல் மற்றும் சமூக, கலாசாரத் தாக்கமே அவனது இயல்பைத் தீர்மானிப்பதாக அமைகின்றது. அவன் எதிர்கொள்ளும் புதிய சவால்கள் அவனை எத்தகைய மனிதனாக உருவாக்குகின்றது, அதை அவன் எதிர்கொள்ளும் விதம் மற்றும் ஒவ்வொரு வயதுப் பருவத்திலும் அவன் பெற்றுக்கொள்ளும் அனுபவம் என்பன அவனது ஆளுமை விருத்தியில் பங்களிக்கிறது எனலாம். ஒரு பிள்ளை தன் விருப்பங்களைப் புரிந்து கொள்ளவும், தன்னைச் சுற்றியுள்ள சூழலோடு இணைந்து செயற்படுவதன் மூலம் தனது ரசனையை, திறனை அறிந்து கொள்ளும் வயதில் முன்பள்ளிக்குச் செல்லுகின்றது. எனவே ஒரு குழந்தை தான் யார் என்பதை முன்பள்ளியிலேயே அடையாளம் காணத்தொடங்குகின்றது. அத்தகைய ரீதியில் முன்பள்ளிகளின் கற்பித்தல் செயற்பாடுகள், சுற்றுச்சூழல் என்பன மாணவர்களின் திறன் மற்றும் ஆளுமை விருத்திக்கு பங்களிக்கும் விதத்தில் அமைந்து காணப்படுகின்றதா? என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக்கொண்டு இவ்வாய்வு அமைகின்றது. இதற்காக கண்டியில் திகண பிரதேசத்தில் அமைந்துள்ள 03 முன்பள்ளிகளைத் தெரிவு செய்து அதன் கற்றல் சூழல், கற்றல் - கற்பித்தல் செயன்முறை, ஆசிரியர் மாணவர்கள் செயற்பாடு என்பன அவதானிக்கப்பட்டும் ஆசிரியரிடமும் மாணவர்களிடமும் கலந்துரையாடல் செய்தும் பெற்றோர்களிடம் வினாக்கொத்துக்கள் மூலமாக தகவல் பெறப்பட்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை ஆய்வின் முதலாம் நிலைத்தரவுகளாக அமைந்துள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுத் தலைப்புடன் பொருந்தக்கூடிய புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளக் குறிப்புக்கள், பத்திரிகைகள் என்பவை அமைந்துள்ளன. மேலும் இவ்வாய்வுக் கட்டுரையானது விளக்க முறை, பகுப்பாய்வு முறை, விமர்சன முறை என்பவற்றைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள் :** முன்பள்ளி, கற்றல் - கற்பித்தல், ஆளுமை விருத்தி, எரிக் எரிக்சன்.

**அறிமுகம்**

இந்த ஆய்வானது குழந்தைப்பருவ நடத்தையில் கற்றல் - கற்பித்தல் சூழல் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை ஆய்வு செய்வதாக அமைகின்றது. குழந்தை விருத்தியில் பிரதான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக பரம்பரையும், சூழலும் காணப்படுகின்றது. குழந்தையின் இயல்பு, மனப்பாங்கு, அமைப்பு என்பனவற்றைத் தீர்மானிப்பதாக பரம்பரைப்பண்புகள் காணப்படுகின்றன. ஆனால் குழந்தையின் நடத்தை மாற்றம், செயற்பாடுகள் என்பனவற்றை குழந்தை வளர்கின்ற சூழலே தீர்மானம் செய்கின்றது. இவை மனித விருத்தியில் பெரும்பங்கு வகிக்கும் விடயங்களாகும். மனித விருத்தி என்பதனுள் உடலியல் விருத்தி, உளவியல் விருத்தி, அறிகை விருத்தி, மனவெழுச்சி விருத்தி, சமூக விருத்தி, ஆன்மீக விருத்தி என்பன உள்ளடங்குகின்றன. பெரும்பாலும் குழந்தை பிறந்து வளருகின்ற வீட்டுச்சூழல் மனித வளர்ச்சியிலும் விருத்தியிலும் பெரும்பங்கு வகிக்கும். இன்றைய நவீன சூழலில் உடலியல் விருத்தி ஏற்படுவதற்கு முன்னரே பிள்ளைகள் சூழல் இடமாற்றத்தினை எதிர்கொள்ளுகின்றது.

பல்வேறு நாடுகளிலும் குழந்தைக்கல்வியானது பல்வேறு வடிவங்களில் அமைந்து காணப்படுகின்றது. ஆரம்பக் குழந்தைப் பருவத்தினரை மையப்படுத்திய இக்கல்வி முறையினை முன்பள்ளி (Pre – School), மழலையர் பள்ளி (Kindergarten), ஆரம்பப்பள்ளி (Nursery School) எனப்பலவாறாக அழைப்பர். 'ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பப்பள்ளிக் கல்வி முறையானது 1677இன் ஆரம்ப காலங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது ஸ்பெயின் அறிக்கைகளின் தகவலாகும் (Palacios, 1989). பிரான்ஸ், இத்தாலி, ஹங்கேரி போன்ற நாடுகளில் 1800களின் ஆரம்ப காலத்தில் ஆரம்பப்பள்ளி முறைமை ஸ்தாபிக்கப்பட்டது (Le Normand, 1992; Pistillo, 1989; Vari, 1989). அதிகமான வடக்கு மற்றும் தென்னாபிரிக்க நாடுகளில் 1800களின் நடுப்பகுதியிலும் கடைசிப்பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஒப்பீட்டு ரீதியில் சில ஆபிரிக்க நாடுகளில் 1900களின் ஆரம்பப்பகுதியிலும் ஆரம்பப்பள்ளி கல்வி முறைகள் தொடக்கி வைக்கப்பட்டன (Onibokun, 1989; Riak et all., 1989). பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட இலங்கை போன்ற ஆசிய நாடுகளிலும் கல்வி முறை உருவாக்கத்தைத் தொடர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஆரம்பக்கல்வி முறைமை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஆரம்பக்கல்வியின் அவசியம் இருபதாம் நூற்றாண்டின் பின்னரைக்கூறுகளிலேயே உணரப்பட்டது எனலாம். ஆனாலும் இன்று வரையில் இலங்கையில் முன்பள்ளிகளின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான அல்லது முன்பள்ளி மாணவர்களுக்கான பத்திரிகைகள், தேடுதளங்கள், அவற்றைக் கவனத்தில் கொள்ளும் அமைப்புக்கள் காணப்படவில்லை.

தெ ஐலண்ட் (The Island) என்ற ஆங்கில இணையப்பத்திரிகையில் டக்ளஸ் எம். கிங்க் எழுதிய 'இலங்கையில் ஆரம்பப்பள்ளிக்கல்வி – ஒரு கண்ணோட்டம்' என்ற கட்டுரையில் குறிப்பிட்ட தகவல்களின்படி, 2 தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட 500000 மாணவர்கள் பகல் நேரங்களில் பாலர் பள்ளிகளில் ஈடுபடுகின்றனர். இவற்றில் அதிகமானவை தனியார் கல்வி முறைமைகளாகும். இது பற்றி விபரிக்கும் ஆய்வுகளோ, சஞ்சிகைகளோ, அமைப்புக்களோ இதுவரை இலங்கையில் உருவாக்கப்படவில்லை. இந்தத்துறையில் ஆராய்ச்சி பற்றிய தகவல்கள் எதிர்மறையான முடிவுகளை உருவாக்கியுள்ளன. அதாவது, முன்பள்ளிகள் எவராலும், எங்கும் அமைக்கப்படலாம். அவற்றின் தரம், அமைப்பு பற்றி எவ்வகையான ஒழுங்குபடுத்தல்களும் மேற்பார்வைகளும் செய்யப்படுவதில்லை. இந்த அமைப்புக்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றிய மட்டுமே அரசாங்கத்தினால் கணிப்பிட முடியும். ஆனால் பொருத்தமான தகுதிகள் இன்றி சுமார் 25000 இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளும் 40000 ஆசிரியர்களும் காணப்படுகின்றனர் (Douglas M King, The Island)

இலங்கையைப் பொறுத்தவரையில் அங்கு உயர்கல்வி மற்றும் பணமீட்டக்கூடிய முதலீடு சார்ந்த தொழிற்கல்வி என்பவற்றுக்கே அதிகமான கவனம் செலுத்தப்படுகின்றது. பல்கலைக்கழக நுழைவு, போட்டி முறைக்கல்வி போன்றவற்றையே பெற்றோர் முன்னுரிமைப்படுத்துகின்றனர். ஆரம்பக்கல்வி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை. பாடசாலைக் கல்வித்திட்டம்கூட பாடத்திட்டம் சார்ந்ததாகும். மாணவர்களுக்கு உகந்ததாக தீர்மானம் செய்யப்பட்ட ஒன்றை வழங்குவதற்கும் மாணவர்கள் விரும்பும் ஒன்றை வழங்குவதற்குமான வேறுபாடு மிக முக்கியமானது. மாணவர்கள் எத்தகைய கல்வி முறைமைக்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள் என்பது முதன்முதலில் அவர்கள் எதிர்கொள்ளும் முன்பள்ளிக்கல்வி முறையில் தங்கியிருக்கின்றது எனலாம்.

**ஆய்வுப்பிரச்சினை**

ஒரு பிள்ளை தன் விருப்பங்களைப் புரிந்து கொள்ளவும், தன்னைச் சுற்றியுள்ள சூழலோடு இணைந்து செயற்படுவதன் மூலம் தனது ரசனையை, திறனை அறிந்து கொள்ளும் வயதில் முன்பள்ளிக்குச் செல்லுகின்றது. எனவே ஒரு குழந்தை தான் யார் என்பதை முன்பள்ளியிலேயே அடையாளம் காணத்தொடங்குகின்றது.

அவ்வகையில் முன்பள்ளிகளின் கற்பித்தல் செயற்பாடுகள், சுற்றுச்சூழல் என்பன மாணவர்களின் திறன் மற்றும் ஆளுமை விருத்திக்கு பங்களிக்கும் விதத்தில் அமைந்து காணப்படுகின்றதா? என்பது தொடர்பில் ஆராய்தல்.

**ஆய்வு நோக்கம்**

கல்வியின் மூலமே சுய மற்றும் சமூக விருத்தி நிலைபேறானதாக அமைகின்றது என்ற வகையில் கல்வி உளவியல் ஆய்வுகளின் தேவைப்பாடு இன்று உணரப்பட்டுள்ளது. குறிப்பாக இலங்கையில் முன்பள்ளி கல்விக்கூடங்கள் பற்றிய ஆய்வு பெரும்பாலும் மேற்கொள்ளப்படவில்லை. முன்பள்ளிகள் குறித்த சரியான புள்ளிவிபரங்களோ, தகவல் சேகரிப்போ, கற்பிக்கின்ற ஆசிரியர்களின் தகுதி, எண்ணிக்கை தொடர்பிலோ எவ்வித ஆவணப்படுத்தல்களும் இருப்பதாகத் தெரியவில்லை. பிள்ளைகளின் ஆளுமை விருத்தியினைத் தீர்மானம் செய்கின்ற வயதில் முன்பள்ளிகளுக்குச் செல்லுகின்ற ஒரு பிள்ளை எத்தகைய ஆளுமை விருத்தியை அல்லது ஆளுமை மாற்றத்தை பெற்றுக்கொள்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாக நிறுவனமயமாக்கப்படாத, மேற்பார்வையற்று சுயமாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும் முன்பள்ளிகளின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பில் அறிந்து கொள்வதும், பகுப்பாய்வு செய்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வானது முதலாம் நிலைத்தரவுகளையும் இரண்டாம் நிலைத்தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டதாகும். கண்டியில் திகண பிரதேசத்தில் அமைந்துள்ள 3 முன்பள்ளிகளைத் தெரிவு செய்து அதன் கற்றல் சூழல், கற்றல் - கற்பித்தல் செயன்முறை, ஆசிரியர் மாணவர்கள் செயற்பாடு என்பன அவதானிக்கப்பட்டும் ஆசிரியரிடமும் மாணவர்களிடமும் கலந்துரையாடல் செய்தும் பெற்றோர்களிடம் வினாக்கொத்து கூலமாக தகவல் பெறப்பட்டும் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுத் தலைப்புடன் பொருந்தக்கூடிய புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளக் குறிப்புக்கள், பத்திரிகைகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

**உளவியலில் குழந்தைப்பருவம் பற்றிய கோட்பாடுகள்**

உளவியலில் மனிதன் பற்றிய ஆய்வு மிக முக்கியமானதாகும். கோட்பாட்டு ரீதியான பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட தூய உளவியல் பிரிவாக விருத்தி உளவியல் காணப்படுகின்றது. விருத்தி உளவியலானது மனிதனின் விருத்தி மற்றும் வளர்ச்சி சார்ந்த விடயங்கள் உள்ளடக்கியது. ஒரு மனிதன் பிறந்தது முதல் முதுமைப்பருவம் வரையிலான உடலியல், உளவியல், நடத்தையியல் சார்ந்த மாற்றங்களையும் விருத்தி அம்சங்களையும் விரிவாக ஆராய்கின்றது. அதன் உள்ளடக்கத்திற்கேற்றவாறு குழந்தை உளவியல் (Child Psychology), வளரிளம் பருவ உளவியல் (Adolescent Psychology), வளர்ந்தோர் உளவியல் (Adult Psychology) என்றவாறாக பாகுபடுத்தி நோக்கப்படுகிறது. இதில் மனித வளர்ச்சி பற்றிய கோட்பாடுகள், கொள்கைகள், விளக்கங்கள், முறைமைகள் என்பன பற்றிய விரிவான எடுத்துக்காட்டுக்கள் தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது.

குழந்தை உளவியலில் ஒரு கரு உருவானது முதல் கட்டிளமைப்பருவத்தை அடையும் வரையிலான விருத்தி மாற்றங்கள் தொடர்பில் விரிவான விளக்கம் வழங்கப்படுகின்றது. அத்தோடு குழந்தை விருத்தி பற்றிய கோட்பாடுகளும் வெவ்வேறு உளவியலாளர்களால் ஆய்வுகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளன. அத்தகைய ரீதியில் சிக்மண்ட் பிறைட் (Sigmund Freud 1856-1939), ஜீன் பியாஜே (Jean piaget 1896-1980), எரிக் எரிக்சன் (Erik Erikson 1902-1994) போன்றோரின் கருத்தியல்கள் மிக முக்கியமானவைகளாகும்.

சாதாரணமாக ஒரு குழந்தை முன்பள்ளிக்குச் செல்லுகின்ற வயதாகக் கணிப்பிடப்படும் 2 தொடக்கம் 5 வரையான வயதுக்காலப்பகுதியில் வெளிப்படுத்தும் பல்வேறு விருத்தி மாற்றங்கள் தொடர்பில் மேற்கண்டோரின் கருத்தியல்களை ஆய்வுக்குட்படுத்தலாம்.

**சிக்மண்ட் பிறைட் :** வியன்னாவைச் சேர்ந்த வைத்தியரான சிக்மண்ட் பிறைட் (1856 – 1939) உளப்பாலியல் விருத்திக்கட்டங்கள் தொடர்பில் விபரித்தார். இவர் நனவு அனுபவத்தினைவிட நனவிலி அனுபவம் சக்தி வாய்ந்தது என்றார். இதுவே மனித நடத்தைகளைத் தீர்மானிப்பதாக அமைகிறது. பிறைட் இளமைப்பருவத்தில் ஏற்படும் பல்வேறுபட்ட நடத்தைசார் பிரச்சினைகளுக்கு குழந்தைப்பருவத்தில் ஏற்பட்ட அனுபவங்களே காரணம், அதாவது நீண்டநாள் மறக்கப்பட்ட விடயங்கள் மீளப்பெறுகின்றமையே இதற்குக் காரணமாகும் எனக்கூறினார். இவரது கருத்தின்படி குழந்தைப்பருவ அனுபவங்களே வலிமை மிக்கவைகளாகும்.

இவர் தனது உளப்பகுப்பாய்வில் பாலியல் உணர்வுகளைப் பிரதானகப் பேசுகிறார். பிறந்த குழந்தையிடம்கூட பாலின்பச் செயற்பாடுகள் உள்ளன என்கிறார் பிறைட். இந்தக் குழந்தைப்பாலுமையை முன்வைத்து 'வளர்ந்த மனிதனை விட' குழந்தையிடம் பாலியல் எண்ணங்கள் வலிமையாகவும் சுதந்திரமாகவும் இருக்கின்றன என்பதை நிறுவுகிறார். இதுவே அவரது அடிப்படை வாதமாகும் (இரவிச்சந்திரன், 2007). குழந்தைப் பாலுமையை முன்வைத்து மனித மனத்தை இயங்கியல் அடிப்படையில் அவர் விளக்கம் செய்கிறார்.

இதனடிப்படையில் பிறைட் பிள்ளை விருத்திக்கட்டங்களை பின்வருமாறு பிரிக்கிறார்.

1. வாய்வழி இன்ப நிலை (Oral Stage) 0 – 2 வயது வரை
2. குதவழி இன்ப நிலை(Anal Stage) 2 – 3 வயது வரை
3. பாலுறுப்பு இன்ப நிலை (Phallic Stage) 3 – 5 வயது வரை
4. மறைவுக்காலம் (Latency Period) 5 – 11 வயது வரை
5. பாலியல் இன்ப நிலை (Genital Stage) 11 – 16 வயது வரை

இவரது கணிப்பீட்டின்படி ஒரு குழந்தை 5 வயதுக்குப் பின்னரே குடும்பச்சூழலை விட்டு வேறுபட்ட கல்விச்சூழலுக்கு இடம்பெயர்கிறது. அதுவரையான பாலூக்க இயல்பிலிருந்து மாறுபட்டு குழந்தை ஏனையவர்களுடன் இணைந்து சமூக ஒன்றிப்பினைப் பெறுகின்றது. ஆனாலும் இவரது கருத்தில் 3 வயது தொடக்கம் 5 வரையான காலப்பகுதியில் முந்திய கட்டங்களை விட குழந்தையின் ஆளுமை விருத்தி மிகத்தீவிரமடைந்து காணப்படும். இந்தக் காலப்பகுதியிலேயே குழந்தை தன்னைப் பற்றிய கணிப்பீட்டை பெற முனைகிறது. தாயுடனும், தந்தையுடனும் தன்னைப்பொருத்திப் பார்த்து தனது செயற்பாடுகள் தொடர்பில் விளக்கம் பெறுகிறது. தாய், தந்தையரின் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தனது பாலினத்தைக் கண்டுகொள்ளும் பருவமாகவும் இது காணப்படுகின்றது.

பிறைடின் கருத்துக்களின் அடிப்படையில் நாம் நோக்குகின்றபோது, குழந்தை 3 வயதிலேயே சூழல் இடம்பெயர்வை எதிர்கொள்ளுகின்ற போது வேறுபட்ட மனிதர்களைச் சந்திக்க நேருகின்றது. இதனால் குழந்தையின் மனப்பாங்கு மற்றும் சமூக விருத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை பிள்ளை எதிர்கொள்ளும். இதன்போது தனது ஒத்த வயதுடைய குழந்தைகள், ஆசிரியர் என்பவர்களுடனான தொடர்பின் மூலம் தன்னைப்பற்றி குழந்தை பெற்றுக்கொள்ளும் கணிப்பு மாறுபடலாம். இதன் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளும் அறிகை, திறன், அடையாளம் என்பவை சிக்மண்ட் பிறைடின் கருத்திலிருந்து மாறுபட்டதாக அமையலாம்.

**ஜீன் பியாஜே :** வளர்ச்சிசார் உளவியலில் மிக முக்கிய பங்களிப்புச் செய்தவராக ஜீன் பியாஜே (Jean Piaget 1896 – 1980) அறியப்படுகிறார். இவரே முதன் முதலில் முறைசார்ந்த வழிமுறையில் குழந்தைகளைப் புரிந்து கொள்வதற்கான கற்கைநெறியைத் தொடக்கி வைத்தார். பிள்ளைகளின் மனவளர்ச்சி பற்றி அவதானம் செலுத்திய பியாஜே பிள்ளை வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உருவாக்குதல் - மீள் உருவாக்குதல் என்பவற்றில் சுய முன்னேற்றத்தைக் கண்டார். இதிலிருந்து அறிகை விருத்தி (Cognitive Development) தொடர்பான தனது உளவியல் பார்வையினை முன்வைத்தார். நுண்ணறிவு (Intelligence) என்பது ஒரு நிலையான பண்பு அல்ல என வலியுறுத்திய உயிரியல் முதிர்ச்சி மற்றும் சூழல் தாக்கம் என்பவற்றால் ஏற்படும் அறிகை விருத்தியே நுண்ணறிவு என விளக்கினார்.

பிள்ளைகளின் வேறுபட்ட அறிகைத் திறன்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பியாஜே பிள்ளை அறிகை விருத்தி வளர்ச்சிக்கட்டங்கள், பிள்ளைகளின் அறிகைக் கற்றலின் விளக்க அவதானங்கள் என்பவை பற்றிய கோட்பாடுகளை முன்வைத்தார். இலக்கம், நேரம், அளவு, காரண – காரியம், சமமாகப் பிரித்தல் போன்ற அடிப்படை எண்ணக்கருக்களை வழங்கி நுண்ணறிதலின் மூலம் பிள்ளைகள் எவ்வாறு எண்ணுகிறார்கள் (Count), உச்சரிக்கிறார்கள் (Spell), பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறார்கள் (Solve Problems) என்பவற்றை கண்காணித்து அளவிட்டார் (மாஹிர் & நப்லா, 2018).

இதனடிப்படையில் பியாஜே பிள்ளை விருத்திக்கட்டங்களை நான்கு வகைகளாகப் பிரித்து நோக்கினார். இது சிந்தனை விருத்தி மேம்பாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும்.

1. புலனியக்கப்பருவம் (Sensorimotor Stage)
   பிறப்பு முதல் 2 வயது வரையான பருவம்

2. தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவம் (Pre – operational stage)
   2 வயது முதல் 7 வயது வரையான பருவம்

3. தூல சிந்தனைப் பருவம் (Concrete operational Stage)
   7 வயது முதல் 11 வயது வரையான பருவம்

4. நியம சிந்தனைப்பருவம் (Formal operational Stage)
   11 வயது முதல் கட்டிளமைப்பருவம் வரை' (McLeod, 2018).

இந்த ஒவ்வொரு பருவக்கட்டங்களிலும் உயிரியல் முதிர்ச்சி மற்றும் சூழல் இடையீடு என்பவை குழந்தை விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றன. இதில் 2 தொடக்கம் 7 வயது வரையான காலப்பகுதியினை தூல சிந்தனைக்கு முற்பட்ட காலம் என்று குறிப்பிடுகிறார். பியாஜேயினைப் பொருத்தவரை 2 வயதுக்கு முன்னரான

காலப்பகுதியில் குழந்தைகள் தொடுதல், பார்த்தல், கேட்டல், உணர்தல் என்ற ரீதியில் புலன்களின் வழியாக அறிதலைப் பெறுகின்றனர். 2 வயது தொடக்கம் 4 வயது வரையில் பிள்ளைகள் பல்வேறுபட்ட நடத்தைகளைப் பெற்றுக்கொள்வர். தன் நடத்தைக்கும் பிறர் நடத்தைக்கும் இடையிலான வேறுபாடுகளை அவர்கள் உணர்வதில்லை. பிறர் செய்வதைப் பார்த்து அதேபோல் தானும் செயற்படுவர். இவ்வயதுக் காலப்பகுதியில் அவர்களுக்கு தர்க்க ரீதியான சிந்தனை காணப்படாது என்கிறார்.

4 வயதில் குழந்தைகளின் அறிகை விருத்தியடைகிறது. 4 வயது தொடக்கம் 7 வயது வரையான காலப்பகுதியில் பிள்ளைகள் தங்களது செயற்பாடுகளுக்கான காரணங்களைச் சிந்திக்க ஆரம்பிப்பர். பிறர் செயற்பாடுகளையும் தங்களது செயற்பாடுகளையும் புரிந்து கொண்டு செயற்படுவர்.

தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தில் குழந்தைகள் தழுவல் செயற்பாட்டின் மூலம் உலகைப்பற்றிய அனுபவங்களை உருவாக்குவதுடன் தர்க்க ரீதியாகச் சிந்திப்பதனூடாக தூல சிந்தனைப்பருவத்துக்குச் செல்வதற்கான ஆயத்தத்தைப் பெறுகிறது. இப்பருவத்தின் முடிவில் குழந்தைகள் பொருட்களையும் நிகழ்வுகளையும் மன ரீதியான கணிப்புக்கு உட்படுத்துவதோடு, குறியீட்டு விளையாட்டிலும் ஈடுபடுகிறது (McLeod, 2018).

**எரிக் எரிக்சன் :** எரிக் எரிக்சன் பிள்ளை விருத்திக்கட்டங்களை எட்டு (8) படிமுறைப் பிரிவுகளாக்கி விளக்கியுள்ளார். அவை 'உளச்சமூக விருத்திப் படிநிலைகள்' (Psycho Social Development Stages) எனப்படும். இந்த ஒவ்வொரு படிநிலைகளிலும் எதிர்கொள்ளும் சவால்களை பிள்ளை எவ்வாறு எதிர்கொள்கிறது என்பதைப்பொறுத்தே அடுத்த விருத்திப்படிநிலையின் ஆளுமை மற்றும் விருத்தி மாற்றம் அமைகிறது என்பது எரிக்சனின் கருத்தாகும். இதில் அவர் ஒரு தனியனின் குழந்தைப்பருவம் (Infancy) முதல் வளர்ந்தோர் பருவம் (Adulthood) வரையான ஆரோக்கியமான விருத்திக்கட்ட மாற்றங்களை விளக்குகிறார்.

ஒவ்வொரு தனியனும் தனது இருப்பை பிறப்பிலிருந்தே பெற்றுக்கொள்கிறான், ஆனால் சூழல் மற்றும் சமூக, கலாசாரத் தாக்கமே அவனது இயல்பைத் தீர்மானிப்பதாக அமைகின்றது. அவன் எதிர்கொள்ளும் புதிய சவால்கள் அவனை எத்தகைய மனிதனாக உருவாக்குகின்றது, அதை அவன் எதிர்கொள்ளும் விதம் அடுத்த படிநிலை விருத்தியில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது, ஒவ்வொரு விருத்திப்படிநிலைகளையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்தல் அவனது எதிர்காலத்தில் எத்தகைய பிரதிபலிப்பாக அமையும் என்பது பற்றியெல்லாம் எரிக்சன் அவரது எட்டு படிமுறை விருத்திக்கட்டங்களினூடாக விபரித்துள்ளார்.

1. குழந்தைப்பருவம் - 0 – 2 வயது
2. முன்பிள்ளைப்பருவம் - 2 – 4 வயது
3. ஆரம்பப்பள்ளிப்பருவம் - 4 – 5 வயது
4. பாடசாலைப்பருவம் - 5 – 12 வயது
5. கட்டிளமைப்பருவம் - 13 – 19 வயது
6. முன் இளமைப்பருவம் - 20 – 40 வயது
7. நடுத்தர வயதுப்பருவம் - 40 – 64 வயது
8. முதுமைப்பருவம் - 65 - இறப்பு வரை

இதில் 2 தொடக்கம் 4 வயது வரையான முன் பிள்ளைப்பருவத்தில் பிள்ளை இயக்கத்திறன் விருத்தியினைப் பெற்றுக்கொள்கிறது. இவ்வயதில் குழந்தைகள் தன்னைச் சுற்றியுள்ளவற்றை ஆராயத் தொடங்குகின்றனர். இதன்போது பெற்றோர் மேலும் வலுவான பாதுகாப்பினை உணரச்செய்கின்றபோது பிள்ளை விருப்புறுதியைப் பெறுகிறது. இங்கு பிள்ளையின் சுதந்திரத்தையும் வெற்றியையும் வடிவமைப்பதில் பெற்றோரின் பொறுமையும் ஊக்கப்படுத்தலும் பெரும்பங்கு வகிக்கிறது. இவ்வயதில் குழந்தைகள் தன்னைச் சுற்றியுள்ள சூழலை ஆராய்வதோடு புரிந்து கொள்ளவும் முற்படுகின்றனர் என்பதால் அவர்கள் எதைக்கற்றுக் கொள்கிறார்கள் என்பது தொடர்பில் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது என்கிறார்.

பிள்ளைகள் இந்த வயதில் தனது முதல் விருப்பத்தை அறிந்து கொள்கிறார்கள். அதாவது இசையை விரும்புகின்ற ஒரு பிள்ளைகள் ரேடியோவோடு விளையாட ஆரம்பித்தல், வெளியே செல்வதை விரும்பும் பிள்ளைகள் விலங்குகள், தாவரங்களை ரசிக்கவும் அவற்றோடு விளையாடவும் விரும்புதல் என்பனவற்றை மேற்கொள்ளும். இதனைப் புரிந்து கொள்வதும், பிள்ளைகளை அதை நோக்கி ஊக்கப்படுத்தலும் பெற்றோரின் கடமைகளாகும். மாறாக பிள்ளைகளின் எண்ணங்களையும் விருப்பங்களையும் கட்டுப்படுத்துகின்றபோது அவர்கள் உலகை சந்தேகக்கண் கொண்டு நோக்கவும், புதிய சவால்களை எதிர்கொள்ளத் தயங்குபவர்களாகவும் காணப்படுவர். (மாஹிர் & நப்லா, 2019). முன்பிள்ளைப் பருவம் எனக் குறிப்பிடப்படும் 4 தொடக்கம் 5 வயது வரையான காலப்பகுதியில் பிள்ளைகள் சுயமாக இயங்குதல், சுதந்திரமாகத் திட்டமிடல், சுய முனைப்போடு செயற்படுதல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். மேலும் தன்னைச் சுற்றியுள்ள உலகம் பற்றிய தீர்மானத்தைப் பெறுவதோடு, தனக்கேயுரிய அடிப்படைத் திறன்களையும் அறிந்து கொள்கிறார்கள். இவ்வயதில் அவர்கள் ஒரு நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டே செயல்களை ஆரம்பித்துச் செய்து

முடிப்பர். புதிய உணர்வுகளைக் கையாள்வதில் குழப்படைந்தவர்களாக இருப்பர். மேலும் அவர்கள் மேற்கொள்கின்ற முயற்சி கைகூடாதபட்சத்தில் மிக இலகுவாக குற்றஉணர்வுக்கு ஆளாவர்.

இப்பருவத்தில் பிள்ளைகள் முன்னெடுக்கும் சுய முயற்சிகளும், சுய தீர்மானங்களும் தலைமைத்துவப் பண்பினையும், அடைவுப் பண்பினையும் விருத்தி செய்கிறது. இதனால் சில விடயங்களை அவர்கள் சுயமாக மேற்கொள்ள ஆரம்பிப்பர். உதவியின்றி பாதையைக் கடத்தல், தனியாக வெளியே செல்லுதல் போன்ற செயற்பாடுகளைச் செய்ய முற்படுவர். இது அவர்களுக்கு ஆபத்து விளைவிக்காத வகையில் வழிநடத்தப்படுவதும் சுய வரையறை பற்றிய தெளிவை வழங்குவதும் அவசியமானதாகும்.

எனவே ஆரம்பப் பள்ளிப்பருவ வயதில் பிள்ளைகள் சுய முனைப்புடன் காரியங்களைச் செய்ய முற்படுகின்றபோது பெற்றோர்களும், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களும் அவர்களுக்கு ஊக்கமளித்து உற்சாகப்படுத்துதலும், சிறந்த வழிகாட்டல்களை வழங்குவதும் முக்கியமானது. இதனால் அவர்கள் பொருத்தமான தெரிவுகளை மேற்கொள்ளவும் சுதந்திரமாக, சுயமாக முடிவெடுக்கவும் முன்வருவார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர்களது செயற்பாடுகளைச் செய்ய விடாமல் தடுப்பதும், சுதந்திரமான செயற்பாட்டுக்குத் தடைவிதிப்பதும் அவர்களை குற்ற உணர்வுக்கு ஆளாக்கி விடும் என்பதாக எரிக்சன் விளக்குகிறார்.

**மாதிரித்தெரிவு**

இந்த ஆய்வுக்காக கண்டி மாவட்டத்திலுள்ள திகண பிரதேசத்தில் அமைந்துள்ள 3 முன்பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. திகண பிரதேசத்தில் 7 முன்பள்ளிகள் காணப்படினும் வசதி மாதிரி அடிப்படையில் 3 முன்பள்ளிகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

அவை பின்வருமாறு:

| இல | முன்பள்ளியின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | Be Friend Better Future Preschool | 35 | 02 |
| 02 | Little Mind Preschool | 50 | 05 |
| 03 | Hilal Islamic Preschool | 16 | 01 |

அட்டவணை : 01 ஆய்வுக்கான முன்பள்ளிகள் விபரம்

ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 3 முன்பள்ளிகளிலும் மொத்தமாக 07 ஆசிரியைகள் கற்பிக்கின்றனர். பிரதான ஆசிரியைகள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக உரையாடல் நிகழ்த்தப்பட்டதுடன் மாணவர்களிடம் பொதுவாக அவதானித்த விடயங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டன. ஆசிரியைகள் அனைவரும் உயர்தரத்தில் சித்தி எய்தியவர்களாக இருப்பதுடன், ஒருவர் வெளிநாட்டில் கற்பித்த அனுபவம் உடையவராக இருந்தார். இதில் டுவைவடந ஆமைனெ ˚சநளஉாழழட இல் கற்பிக்கின்ற பிரதான ஆசிரியை மாத்திரம் முன்பள்ளிக் கற்பித்தல் தொடர்பான கற்கைநெறியினைப் பூர்த்தி செய்தவராவார். தெரிவு செய்யப்பட்ட மூன்று முன்பள்ளிகளும் அவர்களால் சுயமாக ஆரம்பிக்கப்பட்டவைகளாகும்.

மொத்தமாக மூன்று முன்பள்ளிகளிலும் 101 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இதில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 10:1 என்ற விகிதத்தில் எளிய எழுமாற்று அடிப்படையில் 10 பெற்றோர்கள் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்து கையளிக்கப்பட்டு தகவல் பெறப்பட்டுள்ளது.

**தரவுப்பகுப்பாய்வும் விளக்கங்களும்**

**வகுப்பறையின் அமைப்பு**

ஆய்வுக்கான முதல் பாலர் பள்ளியின் வகுப்பறையானது அடைக்கப்பட்ட சூழலில் அமைந்து காணப்பட்டதோடு பிள்ளைகள் அடிக்கடி வெளியே செல்வதைத்தவிர்க்க கதவு மூடப்பட்டும் இருந்ததால் போதிய வெளிச்சமின்றிக் காணப்பட்டது. வகுப்பறையின் ஒழுங்கமைப்பு, கதிரை போடப்படும் விதம் என்பன தினமும் ஒரே ஒழுங்கிலேயே காணப்பட்டது. மாணவர்கள் வரிசையாக போடப்பட்ட கதிரைகளில் அமரவைக்கப்பட்டிருந்தனர். வகுப்பறைச் சுவர்கள் வண்ணங்களாலும் பொருட்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் விளையாடுவதற்கு எவ்வித பிரத்தியேக ஏற்பாடுகளும் காணப்படவில்லை.

இரண்டாவது பாலர் பள்ளி வகுப்பறையில் 50 மாணவர்கள் இருந்தனர். ஆனால் வகுப்பறை நெருக்கமானதாகவும் சிறியதாகவும் அமைக்கப்பட்டிருந்தது. மேசையைச்சுற்றி 10 மாணவர்கள் என குழு

முறையில் மாணவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். வகுப்பறைக்கதவு திறந்து காணப்பட்டது. மாணவர்கள் விளையாடுவதற்கான வசதிகள் எதுவும் காணப்படவில்லை.

மூன்றாவது பாலர் பள்ளி திறந்தவெளி அமைப்பினைக் கொண்டதாகவும் காற்றோட்டமானதாகவும் இருந்தது. அமைதியான தெளிவான சூழல் காணப்பட்டது. மாணவர்கள் விளையாடுவதற்கான ஏற்பாடுகள் இல்லாவிட்டாலும் இடவசதி கொண்டதாக இருந்தது.

**மாணவர்களின் செயற்பாடுகள்**

முதல் ஆய்வுப் பள்ளியான Be Friend Better Future Preschool இல் அவதானித்தன்படி, வகுப்பறை மூடப்பட்ட அமைப்பில் மாணவர்களுக்குத் தனித்தனியாக தளபாட இருக்கைகளுடன் அமைந்திருந்தது. மாணவர்கள் அதிகமாக வகுப்பறையை விட்டு வெளியில் ஓடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர். அதனால் வகுப்பறைக்கதவு எப்போதும் மூடியபடியே இருந்தது. மூடிய வகுப்பறையினுள்ளும் மாணவர்கள் நடமாடிக்கொண்டே இருந்தனர். ஆசிரியர் மென்மையாக பேசும்போது அமர்ந்தாலும் சிறிது நேரத்திலேயே மீண்டும் எழுந்து விடுகின்றனர். இந்த வகுப்பறையில் பிள்ளைகள் ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க விரும்பவில்லை. தங்களுக்கு விருப்பமான செயலையே செய்து கொண்டிருந்தனர்.

பிள்ளைகள் அனைவரையும் நிறம் தீட்டும் செயற்பாட்டினை மேற்கொள்ள வைத்தபோது, ஆசிரியரின் நிற வழிகாட்டல்களைத் தவிர்த்து தாங்கள் விரும்பிய நிறங்களையே தீட்டுவதைக் காண முடிந்தது. சித்திரம் வரைகின்ற போதும், நிறம் தீட்டுகின்ற போதும் ஏனைய நேரங்களைவிட வகுப்பறை மிகுந்த அமைதியாகக் காணப்பட்டது.

மாணவர்களிடம் பிடித்த நிறம் எது? எனக்கேள்வி எழுப்பியபோது, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடை அளித்தனர். சிலர் பிறர் கூறிய நிறங்களை அப்படியே கூறினர். இதன் மூலம் அவர்கள் கேள்விக்கு பதலளிக்க முற்பட்டனர். எல்லோருக்கும் ஏதாவது ஒரு நிறம் பிடித்தமானதாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பதை இதனூடாக அறிய முடிந்தது.

உள்ளே இருக்க விருப்பமா? வெளியே செல்ல விருப்பமா? என்ற கேள்விக்கு அதிகமான மாணவர்கள் வெளியே செல்வதற்கான விருப்பத்தையே தெரிவித்தனர்.

ஆசிரியரோடு பயமா, விருப்பமா? என்ற கேள்வியை எழுப்பியபோது அதிகமான பதில்கள் பயம் என்றே காணப்பட்டன.

இரண்டாவது ஆய்வுப் பள்ளியான Little Mind Preschool இல் அவதானித்ததன்படி, இங்கும் மாணவர்கள் வகுப்பில் அமர்ந்திருப்பதைவிட எழுந்து வகுப்பை விட்டு வெளியே செல்லவே ஆர்வம் காட்டினர். வகுப்பில் இருக்கும்போதுகூட விளையாடிக்கொண்டே இருந்தனர். சேர்ந்தோ, தன்னிடம் உள்ள பொருட்களை வைத்து தனியாகவோ விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு பிள்ளை வகுப்பை விட்டு வெளியேறுவதற்காக காரணம் ஒன்றைக்கூறுகின்றபோது அதனையே அனைவரும் கூறிக்கொண்டு வெளியேறவே முனைகின்றனர்.

ஆசிரியர் மிகுந்த கட்டுப்பாடு உடையவராக இருந்ததனால் வகுப்பறையின் கதவு திறந்திருந்தாலும் மாணவர்கள் அனுமதியின்றி வெளியேறவில்லை.

பிடித்த நிறம் தொடர்பான கேள்விக்கு மாணவர்கள் வேறுபட்ட பதில்களைக் கூறினாலும் ஒருவர் இரண்டு, மூன்று நிறங்களைக் கூறினர்.

வகுப்பறையின் உள்ளே இருப்பதைவிட அதிகமான மாணவர்கள் வெளியில் செல்ல விருப்பம் என்ற கருத்தினையே கொண்டிருந்தனர்.

ஆசிரியருக்குப் பயமா? என்ற கேள்விக்கு அதிக அனைத்து மாணவர்களும் 'ஆம்' என்றே பதிலளித்தனர்.

மூன்றாவது ஆய்வுப்பாடசாலையான Hilal Islamic Preschool இல் அவதானித்தன்படி, இந்தப் பாலர் பாடசாலை திறந்த வெளியில் அமைந்து காணப்பட்டதனால் மாணவர்கள் விரும்பியபடி செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இங்கு பள்ளிக்கு வருவதில் அதிகமான மாணவர்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். ஆசிரியர் பெரிதாக பிள்ளைகளின் செயற்பாடுகளில் உதவி செய்யாமல், சுயமாக செயற்பட அனுமதித்திருந்தனர்.

**ஆசிரியர்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும்**

ஆய்வு செய்யப்பட்ட மூன்று பாலர் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்கள் பெரும்பாலும் விருப்பத்துடனேயே பள்ளிக்கு வருவதாகவும் கற்பதாகவும் கூறினர். முதலாவது பள்ளியின் ஆசிரியையின் கருத்தில் மாணவர்களை அறிவுரையை விட பரிசுப்பொருட்களால் அமைதிப்படுத்த முடியும் என்ற கருத்து பெறப்பட்டது. இது ஒரு ஆசிரியர்


மையப்பள்ளி என்ற அவர் மாணவர்களின் சுய கற்றலைவிட ஆசிரியரின் வழிகாட்டல்கள் அதிகமாகச் செயற்படுத்தப்படும் என்றார். எனினும் வகுப்பறையைச் சுற்றி வைக்கப்பட்டுள்ள பொருட்களிலிருந்து அவர்களாகவே சுயமாகக் கற்க முடியும் எனக்குறிப்பிட்டார். பாலர் பாடசாலைக்கு வந்த புதிதில் இருந்ததை விடவும் நாட்கள் செல்லச்செல்ல மாணவர்கள் முன்னேற்றகரமான நடத்தை மாற்றத்தை வெளிப்படுத்துவதாக ஆசிரியை கருத்தளித்தார் (நேர்காணல் 01).

இரண்டாவது பாடசாலையின் ஆசிரியை, அண்மையில் அரசு தெரிவித்த முன்பள்ளி மாணவர்களுக்கு வீட்டுப்பயிற்சிகள், எழுத்துப்பயிற்சி அளிக்கக்கூடாது என்ற கருத்தோடு தான் உடன்படவில்லை என்பதைத் தெரிவித்தார். தங்களால் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தின் (Syllabus) அடிப்படையில் பாடம் நடத்தப்படுகிறது என்ற அவர் மாணவர்களைக் பிரம்பு கொண்டு கண்டிப்பதில்லை என்றார் (நேர்காணல் 02). ஆனால் மாணவர்களைக் கட்டுப்படுத்த அவர் பிரம்பை பயன்படுத்துவதை அவதானிக்க முடிந்தது.


மூன்றாவது பள்ளியின் ஆசிரியையின் கருத்தில் அதிகமான மாணவர்கள் மிகுந்த விருப்பத்தோடு பள்ளி வருகிறார்கள். தினசரி மாணவர்களின் வரவு கணிசமான அளவிலேயே காணப்படுகின்றது என்றார். கற்றல் நடவடிக்கைகளின்போது தாய் அருகில் இருந்து வழிநடத்துவதை சில மாணவர்கள் விரும்புகின்றனர். பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியை அருகில்நின்று வழிநடத்தும்போதே செயற்பாடுகளைச் செய்கின்றனர். 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியை என்ற ரீதியிலேயே கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற வேண்டும் என்ற அவர்கள் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் காணப்பட வேண்டும் என்று கூறினார் (நேர்காணல் 03).

**பெற்றோரின் கருத்துக்கள்**


1. ஒரு பிள்ளை முன்பள்ளிக்குச் செல்ல வேண்டிய சரியான வயது




2. பிள்ளைகளுக்கு அதிகமாக எழுத்துப்பயிற்சி வழங்கப்பட வேண்டும்.



3. முன்பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள் அதிகம் விரும்புவது




பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகள் அதிமாக தாமாகக் கற்பதையும், எழுதுவதையும், வீட்டுப்பாடம் செய்ய வேண்டும் என்பதையும் விரும்பினர். Little Mind Preschool இல் கற்கின்ற மாணவர்களின் பெற்றோரின் கருத்துப்படி அங்கு பாடசாலைகளைப்போன்று தமிழ், ஆங்கில, சிங்கள தினங்கள் முன்னெடுக்கப்படுவதாலும் ஏனைய மாணவர் செயற்பாட்டு நிகழ்வுகள் நடைபெறுவதாலும் பிள்ளைகளுக்கு கற்றல் செயற்பாடுகள் அதிகமாக அமைந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

**முடிவுரை**

இன்றைய சூழலில் குழந்தை உளவியல் பற்றிய ஆய்வுகள் பெருங்கவனத்தைப் பெறுகின்றன. அதன் அர்த்தம் குழந்தைகளுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது மாத்திரம் அல்ல. குழந்தைப்பருவ விருப்பங்களும், உள்ளார்ந்த உந்துதல்களும் மறுக்கப்படாத கல்வி முறைமைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானதொன்றாகும். பாடசாலைகளைப் பொறுத்தளவில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டங்களின் அடிப்படையில் மாணவர்கள் செயற்பட்டுக்கொண்டிருப்பர். ஏனெனில் ஒரு பிள்ளை பாடசாலைக்குச் செல்லும் வயதில் அறிதிறனும், சிந்தனைத்திறனும் விருத்தியடைந்து காணப்படும். ஆனால் ஒரு பிள்ளை முன்பள்ளிக்குச் செல்லும் வயதாகக் கணிப்பிடப்பட்டுள்ள 2 தொடக்கம் 5 வயது வரையான காலப்பகுதி அறிதிறன் மற்றும் சிந்தனைத்திறன் விருத்திக்கான ஆரம்பக்கட்டங்களாகும். இவ்வயதில் பிள்ளைகள் சுதந்திரமாகத் தாமாகக் கற்றுக்கொள்ள முற்படுவர். அக்கற்றலுக்கு குழந்தையின் கல்விச்சூழல் பெரும்பங்கை வகிக்கும். ஆர்வம் மற்றும் ஆற்றல் வெளிப்பாட்டை முன்னெடுக்கின்ற காலப்பகுதியில் பெரும்பாலான நேரத்தை கட்டுப்பாடுகளுடனும், கட்டளைகளுக்கு அடிபணிகின்ற வேலைகளைச் செய்பவர்களாகவும் உருவாக்குகின்ற போது அது அவர்களது சிந்தனைத்திறன் மற்றும் அறிதிறனில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும்.

வளர்ந்த ஒருவரின் நடத்தை சார்ந்த பிரச்சினைகள் குழந்தைப்பருவ அனுபவங்களிலேயே தங்கியிருக்கிறது என்பது உளவியலாளர் சிக்மண்ட் பிறைடினுடைய கருத்தாகும். குழந்தை வளருகின்ற சூழல் அது பெற்றுக்கொள்ளும் அனுபவத்தைத் தீர்மானிக்கும். 2 – 4 வரையான வயதுக்காலப்பகுதியில் குழந்தை தன்னைச் சுற்றியுள்ள சூழலை ஆராய்ந்து புரிந்து கொள்ள முற்படுகின்றது. இதன்போது அவர்களுக்கு சுதந்திரத்தையும் ஊக்கிவிப்பையும் அதிகமாக வழங்க வேண்டியது அவசியமாகும் என்பது உளவியல் ஆய்வாளர் எரிக் எரிக்சனின் கருத்தாகும். எனவே குழந்தை எதைக் கற்றுக்கொள்கிறது என்பதில் கவனம் செலுத்த வேண்டியது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும்.

அதனடிப்படையில் ஆய்வு செய்யப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் முடிவுகளுக்கு வரமுடியும்.

1. அவதானிக்கப்பட்ட மூன்று முன்பள்ளிகளிலும் மாணவர்கள் கட்டமைக்கப்பட்ட வகுப்பறைக்குள் 5 மணித்தியாலங்கள் ஒரே இடத்தில் அமர்ந்திருக்க விரும்பவில்லை, அடைக்கப்பட்ட வகுப்பபை விட்டு வெளியேறுவதிலும் விளையாடுவதிலும், மகிழ்ச்சி தரக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடவும் விரும்புகின்றனர். எனவே முன்பள்ளிகளின் கற்பித்தல் முறைமையானது 'நாம் நினைப்பதை குழந்தைகள் செய்ய வேண்டும்' என்ற வரையறை அமைப்பிலிருந்து மாற்றம் பெற வேண்டும். குழந்தைகள் எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து அதற்கான வழிமுறைகளில் செயற்படுவதற்கான சுதந்திரத்தை வழங்க முன்பள்ளிகள் முன்வர வேண்டும்.
2. அவதானிக்கப்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியைகள் உயர்தரக்கல்வியை (யு.ஃ.டு) முடித்துக்கொண்டு இலகுவான தொழில் வழிமுறையான முன்பள்ளிகளை அமைத்துக் கற்பிக்கின்ற நடைமுறையே காணப்பட்டது. இதற்கான எந்தவொரு வழிகாட்டுதல்களையோ, கற்கைநெறிகளையோ அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. மாணவர்களைக் கையாளும் விதம், எல்லா மாணவர்களையும்

பொதுமையான ஒரு செயற்பாட்டுக்குள் உள்ளடக்க நினைப்பது என்பன திருப்திதரக் கூடியதாக இல்லை. எனவே முக்கியமாக முன்பள்ளிகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், அவர்களது கல்வித்தரம், அவர்கள் பிள்ளைகளோடு நடந்து கொள்ளும் விதம் என்பன கல்வி சார்ந்த அதிகாரிகளால் கவனத்தில் கொள்ளப்பட்டு அவை தொடர்பில் கற்பிக்கப்பட வேண்டும்.

3. கல்வி கற்கின்ற முன்பள்ளிச்சூழல் மாணவர்களுக்குப் பொருத்தமானதாக அமையவில்லை. கட்டுப்பாடுகள் நிறைந்ததாகவும், போதிய வெளிச்சமின்றியும், எப்போதும் அடைக்கப்பட்டதாகவும் இருந்தது. விளையாடுவதற்கான இடவசதிகள் எந்த முன்பள்ளியிலும் காணப்படவில்லை. ஆனால் பெற்றோருக்கு வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் அடிப்படையில் மாணவர்கள் விளையாட்டிலேயே அதிக விருப்பம் காட்டியுள்ளனர்.
4. ஒரு முன்பள்ளியில் பிரத்தியேகமாக பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு கற்பிக்கப்படுகிறது. அதிக எழுத்து வேலைகள் வழங்கப்படுகிறது. பிள்ளைகள் வீட்டுப்பாடம் செய்யப் பணிக்கப்படுகிறார்கள். இது மாணவர்களை எப்போதும் ஒரே விடயத்தைப் பற்றியே சிந்திக்க வைக்கிறது. இவை மாணவர்களை நெருக்கடிக்கு ஆளாக்கும் விடயங்களாகும். அத்தோடு பாடம் சார்ந்த போட்டி முறைகள் மாணவர்களிடையே பிணக்குகளைத் தோற்றுவிக்கவும், போட்டி மனப்பான்மையை விதையிலிருந்தே உருவாக்கும் முயற்சியாகவும் அமையும். இது ஆரோக்கியமான குழந்தை விருத்திக்கு உதவாது.
5. மாணவர்களுக்கு அதிகமாக எழுப்பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒருமித்த கருத்துடையவர்களாக இருப்பதைக் காணமுடிகிறது. எழுதினால்தான் மாணவர்கள் கற்கிறார்கள் என்ற மனப்பாங்கு இவர்களிடம் இருப்பதை இது காட்டுகிறது. பிள்ளைகள் சூழலில் இருந்து பெற்றுக்கொள்கின்ற ஒவ்வொரு அனுபவத்தின் மூலமும் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். இது தொடர்பில் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் தெளிவூட்ட வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது.
6. 'உங்களுக்கு பிடித்த நிறம் எது?' என்ற கேள்வி அவர்களது மனப்பாங்கை அறிவதை நோக்காகக்கொண்டு கேட்கப்பட்டதாகும். ஒருசில பிள்ளைகள் நிறங்களைக் கூறியிருந்தாலும், ஏனையோர் அதை அப்படியே பிரதிபலித்திருந்தனர். சில மாணவர்கள் அதில் தடுமாறியதை காண முடிந்தது. சில மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நிறங்களையும் கூறி இருந்தனர். ஏதாவது ஒன்றுதான் பிடித்திருக்க வேண்டும் என்பது உட்கிடையாகிறபோது ஏனையவை பிடிப்பதில்லை என்பதே கேள்வியின் மறைமுகமான அர்த்தம். அவ்வகையில் இது ஒரு தவறான கேள்வி. ஒற்றைப்படுத்தப்பட்ட பதில்களையும் மனநிலையையும் உருவாக்கும் இத்தகைய கேள்விகள் சிறுவயதிலிருந்தே தடுக்கப்படுதல் சிறந்தது.

போன்ற முடிவுகளுக்கு வர முடியும்.

**References**


Bob Moon, Sally Brown and Miriam Ben-Peretz, (2000), Routledge International Companion to Education, New York: Routledge.

Erikson, E. H. (1950). *Childhood and society*. New York: Norton.

Matthews, G., (1998), The Philosophy of childhood, Cambridge, MA: Harvard University Press.

Piaget, J., (1936), Origins of intelligence in the child, London: Routledge & Kegan Paul.

Piaget, J., (1945), Play, dreams and imitation in childhood, London: Heinemann.

Wadsworth, B.J., (2004), Piaget's Theory of cognitive and affective development: Foundation of constructivism, Longman Publishing.

Erikson, E. H., Paul, I. H., Heider, F., & Gardner, R. W. (1959). *Psychological issues (Vol. 1)*. International Universities Press.

Freud, S. (1923). *The ego and the id*. SE, 19: 1-66.

Le Normand, M. (1992), 'Early Childhood Education in France'. In G. A. Woodill, J. Bernhard and L. Prochner (eds). International Handbook of early Childhood Education. New York: Garland, 205 – 206.

Onibokun, O.M. (1989), 'Early Childhood Care and education in Nigeria'. In P.P. Olmsted and D.P. Weikart (eds), How Nations Serve Young Children: Profile of Child care and Education in 14 Countries. Ypsilanti, MI: High/Scope Press, 219 – 240.

Pistillo, F. (1989), 'Preprimary education and care in Italy'. In P.P. Olmsted and D. P. Weikart (eds), How Nations Serve Young Children: Profiles of Child Care and Education in 14 Countries. Ypsilanti. MI: High/Scope Press, 151 – 202.

Riak, P., Rono, R., Kiragu, F. and Nyakuri, M. (1989). Early Childhood Care and Education in Kenya', In P.P. Olmsted and D. P. Weikart (eds), How Nations Serve Young Children: Profiles of Child Care and Education in 14 Countries. Ypsilanti. MI: High/Scope Press, 203 – 218.

Vari, P. (1989). 'Care and Education in Hungary for 3 to 6 years olds', In P.P. Olmsted and D. P. Weikart (eds), How Nations Serve Young Children: Profiles of Child Care and Education in 14 Countries. Ypsilanti. MI: High/Scope Press, 143 – 149.

Gowtham, S. (2019). Erikson's Stages of Psychological Development | Psychology. Retrieved from http://www.psychologydiscussion.net/developmental-psychology/eriksons-stages-of-psychological-development-psychology/

McLeod, S. A. (2018, May 03). *Erik Erikson's stages of psychosocial development*. Retrieved from https://www.simplypsychology.org/Erik-Erikson.html

McLeod, S.A., (2018), Jean Piaget's theory of cognitive development, Retrieved from www.siplypsychology.org

இரவிச்சந்திரன், தி.கு., (2007), ப்ராய்ட் யூங் லக்கான் - அறிமுகமும் நெறிமுகமும், சென்னை : அடையாளம் பதிப்பகம்.

மாஹிர், ஐ.எல்.எம்., நப்லா, கே. எல். (2018), ஜீன் பியாஜேயின் அறிகை விருத்திக்கோட்பாடும் அதன் பிரயோகப் பயன்பாடும், Journal of Social Review, சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசார பீடம், தென்கிழக்குப்பல்கலைக்கழகம், 56 – 63.

மாஹிர், ஐ.எல்.எம்., நப்லா, கே. எல். (2019), எரிக் எரிக்சனின் உளச்சமூக விருத்திப் படிநிலைகள் - ஓர் உளவியல் பகுப்பாய்வு, நவீனத்தமிழ் ஆய்வு, இந்தியா: ராஜா பதிப்பகம். 777 – 790.